**O.S. No.272/2016**

**Deposition of D.W.1**

**Dated : 6.02.2026**

**Name : Thiru.Daison Moses Muthuraj**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். வழக்கின் வா.சா.1 மிக அன்பு ஜெயக்குமார் எனக்கு உறவினரா என்றால் என் தகப்பனாரின் அக்காவின் பேரன் ஆவார். 2ம் பிரதிவாதி என்னுடைய சித்தப்பா ஆவார். வழக்கு சொத்து ஆதியில் என்னுடைய தாத்தா பெயரில் இருந்தது. வழக்கு சொத்துக்களுக்கு போய்வருவதற்கு பாதைகள் வாய்மொழியாக பேசி விட்டுக்கொடுத்து பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால் இல்லை. வாதியின் முனனோர்கள் வழக்குச்சொத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பட்டியல் சொத்தில் உள்ள ஏ பி சி டி இ சொத்தானது வாதிகள் கைவசம் உள்ளது என்றால் சரிதான். ஏ பி சி டி இ சொத்திற்கு சென்று வருவதற்கு வழக்குச்சொத்து பி செடியுல் பாதை மட்டும் தான் உள்ளது என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் வரைபடத்திலும் ஒரு பாதை மட்டும் தான் உள்ளது என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஒருதலைபட்சமாக தாக்கல் செய்துள்ளார். வாதிகள் ABCDE சொத்திற்கு அந்த பாதை வழியாகத்தான் மின்இணைப்பு தண்ணீர் இணைப்பு பெற்றுள்ளார்கள் என்றால் இல்லை. பி செடியுல் பாதை கிழக்கிலிருந்து மேற்கில் செல்லும் பாதை என்றால் சரிதான். அந்த பாதையைதான் வாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரிடம்

மாற்றுப்பாதை இருப்பதாக நான் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன் ஆனால் ஆணையர் பார்க்கவில்லை. வா.சா.ஆ.14 புகைப்படங்களின் படி அந்த பாதையில் நான் அத்துமீறி சுவர் எழுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல இடிந்த சுவற்றில் பராமரிப்பு வேலை மேற்கொண்டேன். கட்டியுள்ள சுவற்றின் நடுவே மின்கம்பம் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பி செடியுல் வழியாக செல்லும் மின்கம்பம், தண்ணீர் குழாய் ஆகியவற்றை சேதப்படுத்தி அத்துமீறி சுவர் கட்டியுள்ளேன் என்றால் இல்லை. இ செடியுல் சொத்திற்கு அந்த மின்கம்பத்தின் வழியாகத்தான் மின்சாரம் செல்கிறது என்றால் சரிதான். வாதிகள் பயன்படுத்தி வந்த பாதையை அபகரிக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தற்போது நான் சுவர் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த இடைக்கால அறிக்கைக்கு நான் ஏதேனும் ஆட்சேபணை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இறுதி ஆணைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தின் படி 2 வது பிரதிவாதியினுடைய நிலத்திற்கும் 1 வது பிரதிவாதி நிலத்திற்கும் எல்லை ஒரே நேர்க்கோட்டில் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பி செடியுல் பாதை தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி செடியுல் பாதையில் 2 வது பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரிதான். வரைபடத்தின்படி 0.716 சென்ட் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கட்டிய மதில் சுவர் மற்றும் கட்டிடம் அவசியமில்லாதது என்றும் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யவேண்டுமென அதனை கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முனபே அந்த

கட்டிடத்திற்கு அனுமதி பெற்று நான் கட்டியுள்ளேன். மின்சாரம் 3 வருடங்கள் கழித்துதான் எடுக்கப்பட்டது. 1995 ஆம் வருடம் அங்கு கட்டியதாக சொல்லும் வீட்டிற்கு மின்சாரம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 1995 ஆம் வருடம் சுற்றி மதில் சுவர் கட்டியதற்கு எதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மனைக்கு தெற்குபுறம் என் பெரியப்பாவின் மனை உள்ளது. என் பெரியப்பாவின் இடத்திற்கு சென்று வருகின்ற பாதை எதுவென்றால் நான் மற்றும் என் சித்தப்பா இடத்திற்கு இடையே உள்ள இடத்தினை பாதைக்காக நாங்கள் கொடுத்துள்ளோம். அந்த பாதையின் தொடர்ச்சி பி செடியுல் பாதையில் முடிகின்றது என்றால் சரிதான். 1979 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் போதே பி செடியுல் சொத்து பாதையாக விடப்பட்டது என்றால் சரிதான். FGHI பகுதிக்கு மேற்குபுறம் உள்ள ஜேசுதாஸ் என்பவருடைய இடத்தில் இருந்துதான் மேற்சொன்ன பி செடியுல் பாதை விடப்பட்டுள்ளது என்றால் இல்லை. என்னுடைய மனையின் சர்வே எண்.817/6 என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மனையின் சர்வே எண்ணும் 817/6 என்றால் சரிதான். வாதிகளின் இடம், ஜேசுதாஸ் இடம், வழககின் பி செடியுல் பாதை மற்றும் நான் அபகரித்து சுவர் கட்டிய இடம் சர்வே எண் 817/5பி2ல் உள்ளது என்றால் இல்லை. சர்வேயர் அளந்து கொடுத்த வரைபடத்தில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வரைபடம் ஒருதலைப்பட்சமானது. சின் ஆசிர் என்பவருடைய வழிப்பாதைய மறித்து கட்டிடம் கட்டியது தொடர்பாக என் மீது வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு முகாந்திரம் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்கு மேல்முறையீடு தாக்கல் செய்து A.S.47/2024 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வாதி

மற்றும் பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் ஏற்பட்ட பிரச்சனையில் காவல் நிலையத்தில் புகார் அளித்து பிரச்சனை ஏற்பட்டதால் அவர்களுடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவேண்டுமென நான் சுவர் கட்டியு்ளேன் என்றால் சரிதான். வாதிகளுக்கு பி செடியுல் பாதையை தவிர்த்து வேறு எந்த பாதையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் அந்த சுவரை இடித்து அந்த இடத்தை வாதிகளுக்கு கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் இல்லை. சுற்று சுவர் கட்டும் சமயத்தில் வாதிகள் சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். அதனையும் மீறி நான் அத்துமீறி சுவர் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் வழக்கு தொடர்புடையது இல்லை என்றால் சரியல்ல.